சென்னை—5, பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்,
முன்னிலை: திரு.V.C.ராகுல், இ.வ.ப.,

செ.மு.எண். பமே.எ2/1901 /2020 நாள்.29.10.2021

பொருள்: பழங்குடியினர் நலம் – பணியாளர் தொகுதி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைச்சுப் பணி – தொகுதி-IV ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பணியிடம் 2018—19, மற்றும் 2019—20 ஆம் ஆண்டுக்குரிய காலிப்பணியிடம் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்ட இளநிலை உதவியாளர் – திருமதி.அ.தமிழரசி என்பவருக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்.191 பொதுத்துறை நாள். 01.02.1962.
2. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதம் எண்.2334/PSD-I/2020, நாள்.28.05.2020.
3. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.இ5/12748/2020, நாள்.12.08.2020
4. பழங்குடியினர் நல இயக்குநரின் செயல்முறைகள் பமே/எ2/942/2020, நாள்.14.08.2020.

********

ஆணை:

2018—19, மற்றும் 2019—20 ஆம் ஆண்டுக்குரிய இளநிலை உதவியாளர் காலிபணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் பரிந்துரைக்கப்பட்டு பார்வை 3—இல் கண்டுள்ள ஆதிதிராவிடர் நல இயக்குநரின் செயல்முறையின்படி பழங்குடியினர் நலத்துறைக்கு இளநிலை உதவியாளராக ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. பார்வை 4—இல் கண்டுள்ள செயல்முறைகளின்படி பணி நியமனம் வழங்கப்பட்டு பணிபுரிந்து வரும் திருமதி.அ.தமிழரசி, இளநிலை உதவியாளருக்கு கீழே அட்டவணையில் அவரது பெயருக்கெதிரே கலம் – 4 ல் உள்ள நாளில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் பரிந்துரைக்கப்பட்டவரது பெயர் மற்றும் பதவி | பணிபுரியும் பணியிடம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட வேண்டிய நாள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| திருமதி.அ. தமிழரசி, இளநிலை உதவியாளர் | பழங்குடியினர் நல இயக்குநரகம், சேப்பாக்கம், சென்னை—5 | **26.08.2020** முற்பகல் | **26.08.2020** முற்பகல் |

இவர் தனது பணிகாலத்தில் மூன்றாண்டுகளில் இரண்டு ஆண்டுகள் தொடர்பணியில் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

தகுதிகாண் பருவ காலத்திற்குள், தமிழ்நாடு அரசு மாவட்ட அலுவலக நடைமுறை தேர்வில் தேர்ச்சி பெறுதல் (T.O.M Test) மற்றும் பவானி சாகர் அரசு அலுவலர் பயிற்சி தேர்விலும் தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியமாகிறது.

இவருக்கு தகுதிகாண்பருவம் முடித்த பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெற்று வழங்கப்பட வேண்டும்.

உரிய பதிவுகள் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது என்று சான்றளிக்கப்படுகிறது.

ஒம்/– V.C.ராகுல்
பழங்குடியினர் நல இயக்குநர்.

28/10/24

பழங்குடியினர் நல இயக்குநருக்காக.

29/10/24

பெறுநர்
திருமதி அ. தமிழரசி,
இளநிலை உதவியாளர்,
பழங்குடியினர் நல இயக்குநரகம்,
சேப்பாக்கம், சென்னை–5

நகல்
1) முக்கிய ஆணைத் தொகுப்பு/உபரி.